பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 22 வியாழக்கிழமை 09.11.2023 அதிர்வு 101

### ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு

## ரொஷானுக்கு சஜித் அழைப்பு



"அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் வந்தால் அவரை வரவேற்பதற்கு தயார். 04





### யாழ். பல்கலை மாணவர்களின் போராட்டத்தையடுத்து

# சட்டத்தரணி சுவஸ்திகாவுக்கு ஆதரவான அறிக்கை வாபஸ்

### பல்கலை ஆசிரியர் சங்கத்துக்குள் வெடித்தது சர்ச்சை

(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கத்துக்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் பிரதான நுழை வாயில்களை மூடி இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவுக்குச் சார்பாக வெளியிட்ட அறிக்கையை வாபஸ் பெற்றுள்ளது. 04

## கிரிக்கெட் நிறுவனம் தனி இராஜ்ஜியமா?



### சஜித் கடும் சீற்றம்

"அமைச்சருக்கும் நாடாளுமன்றத்துக்கும் மேலாக இலங்கை கிரிக்கெட் சபை தனி இராஜ்ஜியம் போல் செயற்பட முடியாது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் உள்ள நாடாளுமன்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04

## துப்பாக்கி வெடித்து ஒருவர் உயிரிழப்பு

துப்பாக்கி வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொஸ்கம பொலிஸ் 04



## மன்னார் கடலில் கைதுசெய்யப்பட்ட 38 இந்திய மீனவர்களும் விடுதலை



(மன்னார் நிருபர்)

மன்னார் கடற்பரப்பில் வைத்து இரு வேறு சம்பவங்களின் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 38 இந்திய மீனவர்களும் இன்று மன்னார் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி 2 படகுடன் 15 இந்திய மீனவர்களும், 04

### கோப்பாயில் மோதல்:

## பெண்கள் உட்பட 23 பேர் மறியலில்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கோப்பாய் மத்தி கிராமத்தில் இரண்டு தரப்புகளுக்கு இடையே நீடித்த மோதல் நிலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கைது செய்யப்பட்ட 3 பெண்கள் உள்ளிட்ட 23 பேரை 04

### நுவரெலியாவில்

## மாபெரும் போராட்டம்!



03

# கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் முதல் மரண தண்டனைத் தீர்ப்பு!

## பிரமந்தனாறு பெண் கொலை வழக்கில் இன்று

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் பெண் ஒருவரை கொலை செய்த குற்றவாளிக்கு ஒன்பது வருடங்களின் பின்னர் இன்றைய தினம் கிளிநொச்சி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்பளித்துள்ளது.

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி மாத்தளை பகுதியைச் சேர்ந்த இராஜசுலோஜனா என்ற பெண் கத்தியால் குத்தப்பட்டுப் படு கொலை செய்யப்பட்டு கிணற்றுக்குள் தள்ளி விடப்பட்ட நிலையில் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கிளிநொச்சி பொலிஸார் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு அயலில் உள்ள சிவில் பாதுகாப்புத்



திணைக்கள அலுவலகத்தில் வேலை செய்த – மரணித்தவரின் காதலனான – எதிரியைக் கொலைக்குப் பயன்படுத்திய கத்தி மற்றும் மரணித்தவர் இறுதியாக வைத்திருந்த கைத்தொலைபேசி மற்றும் உடைகள் என்பவற்றுடன் கைது செய்து ஆஜர்படுத்தியிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.

இன்றைய தினம் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ. எம் .ஏ சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரிக்கு தீர்ப்பு வாசித்துக் காட்டப்பட்டதுடன் எதிரியின் இறுதிக் கருத்தும் கேட்டதை தொடர்ந்து மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பு வழங்கும் போது அனைவரும் எழுந்து நின்றனர். நீதிமன்றத்தின் அனைத்து மின் விளக்குகளும் அணைக்கப்பட்டு நீதிமன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட முதலாவது மரண தண்டனை தீர்ப்பு இதுவாகும்.

# எமது கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறுகின்றமையை ஏற்கவே முடியாது

## கிராஞ்சி கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலர் திட்டவட்டம்

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் வந்து தொழில் செய்வதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என கிராஞ்சி ஸ்ரீ முருகன் கடற்றொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

இவர்களின் செயற்பாட்டால் எமது வளங்கள் பாதிக்கப்படுகின்றன. அத்து



டன் எமது வளங்களை அள்ளிச் செல்கின்றனர். எமது பகுதி மீனவர்களும் இந்திய கடற்பகுதிக்குள் சென்று கடற்றொழிலில் ஈடுபடுவதை ஏற்க முடியாது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இதனையே சொல்கிறார்.

கடந்த காலங்களில் கிராஞ்சி பகுதியில் கடலட்டை பண்ணை வழங்க ஒரு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் கடலட்டை பண்ணை போட்டவர்களுக்கு இலட்சக்கணக்கான பணம் லாபமாகக் கிடைத்துள்ளது.

மேலும் பலர் கடலட்டை பண்ணைக்கு விண்ணப்பித்துள்ளனர். பாரம்பரிய கடற்றொழில் செய்பவர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் அவர்களுக்கும் கடலட்டை பண்ணையை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# சப்ரகமுவவில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு தீபாவளிக்கு மறுநாள் விடுமுறை அறிவிப்பு

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அடுத்த நாள் எதிர்வரும் திங்கட்கிழமை (13ஆம் திகதி) சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறையளிக்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராய்ச்சியிடம் வேண்டுகோள் விடுத்தமையோடு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் மற்றும் நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானிடமும் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கமைய மாகாண ஆளுநர் விடுமுறை



வழங்குவதற்கு உறுதியளித்துள்ளார்.

எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீபாவளி பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. அதன் காரணமாக திங்கட்கிழமை சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க வேண்டுமென அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரும் ரூபன் பெருமாளிடம் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்தனர்.

இந்த கோரிக்கையின் பிரகாரம் எதிர்வரும் திங்கட்கிழமை சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் விடுமுறை அளிக்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கையெடுத்துள்ளார். தமது வேண்டுகோளை நிறைவேற்றிய சப்ரகமுவ மாகாண ஆளுநர் கௌரவ நவீன் திசாநாயக்கவுக்கும், கௌரவ அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறார் என ரூபன் பெருமாள் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.



# தபால் நிலைய விற்பனைக்கு எதிராக நுவரெலியாவில் பாரிய போராட்டம்!

நுவரெலியா பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக இன்று ஒன்று கூடிய ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள், கோஷங்களை எழுப்பி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா தபால் நிலையக் கட்டடத்தை வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்ததே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா மற்றும் கண்டி தபால் நிலையக் கட்டடங்களை வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்ய அரசாங்கம் முயற்சித்து வருவதாக கூறப்பட்டது.

இதையடுத்து, நாடு தழுவிய ரீதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 48 மணிநேர பணிப் பகிஷ்கரிப்பொன்றை தபால் ஊழியர்கள் ஆரம்பித்திருந்தார்கள்.

இந்த நிலையில், எதிர்ப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக, நுவரெலியா நகரில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டம் காரணமாக நுவரெலியா நகரில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.


















# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பெண்கள் உட்பட...

14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உள்பட்ட கோப்பாய் மத்தி கிராமத்தில் இரண்டு தரப்புகளுக்கு இடையே கடந்த சில தினங்களாக நீடித்து வந்த முரண்பாடு கடந்த திங்கட்கிழமை இரவு மற்றும் செவ்வாய்கிழமை இரவு ஆகிய இரு நாள்களாக மோதலாக மாறியது.

இந்த மோதலால் பல ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அங்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்த போது, இரண்டு தரப்பிலுமாக 3 பெண்கள் உள்ளிட்ட 23 பேர் கைது செய்யப்பட்டனர்.

நபர்களைத் தாக்கியமை, சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை மற்றும் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் 23 பேருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நேற்று அவர்கள் முற்படுத்தப்பட்டனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, 23 பேரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## துப்பாக்கி வெடித்து...

பிரிவுக்குட்பட்ட அஸ்வத்த வடக்குப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றில் வெடிமருந்தை செலுத்திக் கொண்டிருந்தபோது துப்பாக்கி வெடித்ததில் அந்த நபர் உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியில் வசிக்கும் 59 வயது நபரே இதன்போது சாவடைந்துள்ளார்.

இவர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்தார் என்று கொஸ்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னார் கடலில்...

கடந்த 29 ஆம் திகதி 3 படகுகளுடன் 23 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இந்த 38 மீனவர்களும் இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், மீண்டும் அவர்கள் இன்று மன்னார் நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது அந்த மீனவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் மன்றில் முன்வைக்கப்பட்டன.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து 38 மீனவர்களுக்கும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

மேலும் குறித்த 5 படகுகளின் உரிமையாளர்களையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு இந்தியத் துணைத் தூதரகம் ஊடாக படகு உரிமையாளர்களுக்கு நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

இன்று விடுதலை செய்யப்பட்ட 38 மீனவர்களையும் மிகிரியாகம தடுப்பு முகாமுக்கு அனுப்பி இந்தியத் தூதரக அதிகாரிகள் ஊடாக நாட்டுக்கு அனுப்பி வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் போது அவர்களின் உடமையில் இருந்த சில சான்றுப் பொருட்களை உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்குமாறு மன்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது.

இன்று வழக்கு தொடுநர் சார்பாக அரச சட்டத்தரணி மன்றில் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டத்தரணி சுவஸ்திகாவுக்கு...

சட்டத்தரணி சுவஸ்திகா கொழும்பில் பொது அரங்கு ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் 'பாசிசவாதிகள்' என்று தெரிவித்து உரையாற்றிருந்தார். அவரின் அந்தக் கருத்துக்கு எதிராக உள்நாட்டில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பல கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், கடந்த ஒக்டோபர் 31ஆம் திகதி அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் சட்டத்தரணி சுவஸ்திகா "நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்" என்ற தலைப்பில் உரையாற்ற இருந்தார். இந்த உரையாடல் இறுதி நேரத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பிரிவினரின் நெருக்கதலின் காரணமாகக் கைவிடப்பட்டது.

இதையடுத்து சட்டத்தரணி சுவஸ்திகாவை மீளவும் அழைத்து சட்டத்துறையிலே தனது உரையை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை உருவாக்க யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று அறிக்கை விடுத்திருந்தது.

இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று முற்பகல் 10 மணியளவில் பல்கலைக்கழக விஞ்ஞானபீட வளாகத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாட மாணவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கு ஆசிரியர் சங்கம் செவிசாய்க்காமல் மெத்தனப் போக்கில் செயற்பட்டது.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் பிற்பகல் 12.45 மணியளவில் பல்கலைக்கழகத்தின் நுழைவாயில்களை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் தொடர்ந்தும் நீடித்த நிலையில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க நிர்வாகக் குழு பிற்பகல் 2 மணியளவில் ஒன்றுகூடியது. இதன் பின்னர் பிற்பகல் 2.45 மணியளவில் சட்டத்தரணி சுவஸ்திகாவுக்கு ஆதரவாக நேற்று வெளியிட்ட தமது அறிக்கையை மீளப்பெறுவதாக அறிவித்து புதிய அறிக்கையை ஆசிரியர் சங்கத்தினர் வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில், "சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் வெளியிட்ட கருத்தான 'பாசிச புலிகள்' என்ற கருத்துடன் எமது ஆசிரியர் சங்கத்துக்கு உடன்பாடு இல்லை. எமது நிர்வாகக் குழுவின் தீர்மானத்துக்கு அமைவாக சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கத்தின் உரை யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 31.10.2023 அன்று நிறுத்தப்பட்டமை தொடர்பான ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையை வாபஸ் பெறுகின்றோம்." – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து தமது போராட்டத்தை வெற்றியுடன் நிறைவுக்குக் கொண்டு வந்தனர் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தால் நேற்று வெளியிடப்பட்டிருந்த அறிக்கை தொடர்பில் ஆசிரியர் சங்கத்துக்குள்ளேயே எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன எனத் தெரிய வருகின்றது.

## ரொஷானுக்கு...

அவர் எமது பக்கம் வருவதை நானும் விரும்புகின்றேன்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற "ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உட்பட அதிகாரிகளை நீக்குதல்" எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகியன ஒன்றிணைந்து கொண்டு வந்த பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே சஜித் மேற்கண்டவாறு கூறினார்.

"ரொஷான் ரணசிங்க பணத்துக்கு அடிபணியும் நபர் கிடையாது. அவர் கள்ளன் அல்லன் என்பது எனக்குத் தெரியும். அவர் போன்றவர்கள்தான் எமக்குத் தேவை." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மேலும் குறிப்பிட்டார்.

## கிரிக்கெட் நிறுவனம்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விளையாட்டுச் சங்கங்கள் என்று அழைக்கப்படும் சில சங்கங்கள் பல்வேறு நோக்கங்களை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டாலும், அவை நடைமுறையில் சங்கங்களாக இல்லை. இந்தச் சங்கங்கள் பல்வேறு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை அல்லது குழு நிகழ்ச்சி நிரல்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதால், இவை தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களில் ஒன்றாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இருந்தாலும், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு உட்பட்ட நாடாளுமன்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழுவுக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் பிரசன்னமாகாதது பிரச்சினைக்குரிய விடயமாகும். நாடாளுமன்றத்துக்கும் அமைச்சருக்கும் மேலாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் செயற்பட முடியாது அது தனி இராஜ்ஜியம் அல்ல.

தற்போதுள்ள சட்ட கட்டமைப்புக்குள் பெயரளவிலான சங்கங்கள் உருவாவதைத் தடுக்க முடியாது என்பதால் புதிய விளையாட்டுச் சட்டம் அல்லது பல சட்டங்களைக் கொண்டு வருவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான பெயரளவிலான சங்கங்களுக்குத் தண்டனை வழங்கும் முறையொன்றை உருவாக்கினால் இவ்வாறான போலிச் சங்கங்கள் உருவாக்கப்படுவது நின்றுவிடும்.

வரவு – செலவுத் திட்ட விவாத வாரத்தின் விசேட தினமொன்றில் இலங்கை கிரிக்கெட் சபையினரை அழைத்து வந்து கேள்வி கேட்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்." – என்றார்.



# நிகழ்நிலை ஊடான கலந்துரையாடல்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கும், லண்டனின் பொது நலவாய அமைப்பின் மேம்பாட்டு அலுவலக வெளிநாட்டு பிரிவுக்கும் இடையிலான நிகழ்நிலை ஊடான கலந்துரையாடல் திங்கட்கிழமை (06) கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது.

பொதுநலவாய மேம்பாட்டு அலுவலக வெளிநாட்டு பிரிவுக்கான செயலாளர் பாரிஸ் மன்சூர் நிகழ்நிலை ஊடாகக் கலந்து கொண்டு கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் சி.மாமாங்கராஜா, அமைப்பின் செயற்குழு உறுப்பினர்களை அறிமுகம் செய்து வைத்தார்.



அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் செயற்குழு உறுப்பினர்களால் மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்கால நிலைமை தொடர்பான நிலை பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

இதன்போது மாவட்டத்தின் காணி தொடர்பான விவகாரம் மற்றும் கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல், சுற்றுலா , விவசாயம், கைத்தொழில் உற்பத்தி தொடர்பான விடயங்கள் முன்வைக்கப் பட்டு கலந்துரையாடப்பட்டன.

அத்தோடு மாவட்டத்தில் தற்காலத் தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை தொடர்பாகவும் அதனைக் குறைப்பதற்கான வழிவகைகள் தொடர் பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

# நீரிழிவு நோயாளர்களது எண்ணிக்கை நாட்டில் சடுதியாக அதிகரித்து வருகிறது

## சுகாதார அமைச்சு தகவல் தெரிவிப்பு

நாட்டில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று சுகாதார அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது.

நாட்டின் சனத்தொகையில் 14.6 வீதமானவர்கள் தற்போது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் சமூக வைத்திய நிபுணர் அருந்திக சேனாரத்ன தெரிவித் துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கை யிலேயே வைத்தியர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உலக சனத்தொகையில் 500 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தொடர்ந்து கருத் துரைத்த சுகாதார அமைச்சின் சமூக வைத்திய நிபுணர் அருந்திக சேனாரத்ன,





உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஒப் புதலுக்கு அமைய சுகாதார அமைச்சால் ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் நீரிழிவு நோய் பற்றிய கணக்கெடுப்பு நடத் தப்படுகிறது.

18 முதல் 69 வயதுக்கு இடைப்பட்ட இலங்கையர்களை பிரதிநிதித்து வப்படுத்தி இந்த கணக்கெடுப்பு முன்னெ டுக்கப்படுகிறது.

இதன்படி, 14.6 வீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் காணப்படுவதுடன், தற்போது நோயாளர்களின் எண் ணிக்கை அதிகரித்து வருவதை அவ தானிக்க முடிகிறது.

2015 ஆம் ஆண்டில் 7.4 வீதமான நீரிழிவு நோயாளர்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 14.6 வீதமாக அதிகரித் துள்ளது.

மன அழுத்தம் மற்றும் ஆரோக்கி யமற்ற உணவு முறைகள் காரணமாகவே இவ்வாறானதொரு நிலை காணப்படு கிறது.- என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எங்கே நீதி?

'சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும்.' - இது ஜூலியஸ் சீசரின் உலகப் புகழ்பெற்ற வார்த்தைகள்.

பெரும் பதவிகளில் - முன்னிலையில் - இருப்பவர்கள் பொதுமக்கள் சந்தேகப்படும் படியாக நடந்து கொள்ளக் கூடாது என்பதை விளக்கும் வாசகமே இது.

இலங்கையின் நீதித்துறையினருக்கு நினைவூட்டப்பட வேண்டிய வாசகமாக இது இப்போது அமைந்துள்ளது.

இப்பத்தியில் நாம் பல தடவைகள் ஏற்கனவே சுட்டிக் காட்டியபடி, 'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.'

ஆனால் இலங்கையின் நீதித்துறையினர் குறித்து அண்மைக் காலத்தில் வெளியாகும் தகவல்கள் அத்துறை குறித்து மக்களுக்குப் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன என்பதுதான் நிலைமை.

நீதித்துறை உயர் அதிகாரிகளை - நீதியரசர்களை, நீதிபதிகளை, நீதிவான்களை - பகிரங்க வெளியில் விமர்சிக்க முடியாது என்ற காப்பரணுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, அந்த பாதுகாப்பில், நீதித்துறையினர் பொறுப்பாகவும், நீதி முறையாகவும் நடந்து கொள்கின்றார்கள் இல்லை என்ற சந்தேகம் பொதுமக்கள் மனதில் எழுவதான ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தக் காப்பரணுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டு சில உயர்நிலை நீதிமன்ற நீதியரசர்கள் நடந்து கொள்ளும் விதம் - போக்கு - பொதுவாழ்வில் இருக்கும் பலருக்கும் நன்கு தெரியும். எனினும் மேற்படி காப்பரணுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு இந்தக் காரியங்களை அவர்கள் ஆற்றுகின்றமையால் எல்லோரும் வாளாவிருக்கின்றனர்.

பதவியைத் துறந்த பின்னர் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பொது மேடைகளில் கூறிய கருத்துக்கள், முன்னாள் பிரதம நீதியரசர் ஒருவர் தமக்கு நேரடியாக வழங்கிய உறுதிமொழி என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட தகவல்கள், 'சனல் - 4' அண்மையில் வெளியிட்ட காணொலி மூலம் நீதித்துறையினர் தொடர்பில் எழுந்துள்ள எண்ணங்கள், நாடாளுமன்றச் சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதித்துறையினர் குறித்து அம்பலப்படுத்தும் தகவல்கள், நீதி - நிர்வாகம் தொடர்பில் நீதித்துறை உயரதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகள், விட்டேத்தியான நடத்தைகள் போன்றவை இலங்கையின் நீதித் துறை தொடர்பில் பலத்த கேள்விகளை எழுப்பி உள்ளன.

ஏற்கனவே இனப் பிரச்சினை விவகாரத்தை ஒட்டிய விடயங்களில் இலங்கையின் நீதித்துறையை நம்பவே முடியாது, அது பற்றிய விடயங்கள் சர்வதேச பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே நீதி, நியாயம் கிடைக்கும் என்று இலங்கையில் இரண்டாவது பெரும்பான்மை இனத்தவர்களான தமிழர்கள் வெளிப்படையாகவே கூறி வருகின்றனர்.

அது இன ரீதியான அடிப்படையில் எழுந்த குற்றச்சாட்டு. இப்போது அரசியல் ரீதியாக, அணி ரீதியாக, சுயநலன் ரீதியாக நீதித்துறையினர் மீது குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

நெருப்பில்லாமல் புகை வராது.

லஞ்சம், ஊழல், மோசடி, முறைகேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகம், சூறையாடல் என்ற இன்னோரன்ன பிற காரணங்களினால் நாடு சீரழிந்து வருகின்றது. அத்தகைய பின்னடைவு நிலையில் இருந்து நாட்டை மீட்க வேண்டிய பிரதான தரப்பு நீதித்துறை. இப்போது அத்துறையே முதலில் தான் இந்த முறைகேடுகளில் சம்பந்தப்படவில்லை என்று சீதை போல தீக்குளித்துக் காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதுதான் நாட்டின் துரதிர்ஷ்டம்.






# அட்டாளைச்சேனையில் முதியோருக்கு உபகரணம்

(எம்.எம்.றம்ஸீன் )

முதியோர் தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட 32 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட பிரஜைகள் 20 பேருக்கு கட்டில் மெத்தை, காற்று மெத்தை, மலசல கூட உபகரணங்கள் என்பன உதவி பிரதேச செயலர் நஹிஜா முஸாபிர் தலைமையில் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கணக்காளர் ஏ.எல். எம்.றிபாஸ், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.பி.சலீம், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜஃபர், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஜீ.எம்.அர்ஸாத், சமூக சேவைகள் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.பி.ஹாஸீம், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.ஹைஸ் மற்றும் ஏனைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.


## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2023

"நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்."
- ஹால் போர்லாண்ட் (அமெரிக்க இயற்கையியலாளர்)
(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)







# தம்பிலுவில், திருக்கோவிலை காவு கொள்கிறது கடலரிப்பு!

(எம்.ஏ.றமீஸ்)

திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தம்பிலுவில் மற்றும் திருக்கோவில் ஆகிய பிரதேசங்களில் அண்மைக் காலமாக நிகழ்ந்து வரும் கடலரிப்பின் காரணமாக இந்தப் பகுதிகளில் பல்வேறான பாதிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. பெரும் நிலப்பரப்பு கடலரிப்புக்கு உள்ளாகி வருகிறது என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிப்படைந்து வருகிறது. கரையோரப் போக்குவரத்து வீதிகள், தென்னந் தோப்புக்கள், மீனவ வாடிகள் போன்றன அழிவடைந்து வருகின்றன.படகு முதலான கடற்றொழில் உபகரணங்களும் சேதமடைந்து வருகின்றன.

கடலரிப்பால் தம்பிலுவில் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் சேதமடைந்துள்ளது.

அத்தோடு திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள மீனவர் கட்டடம் ஒன்றும் வெகுவாகச் சேதமடைந்துள்ளது.

கடலலையின் தாக்கத்தின் காரணமாகப் பல ஏக்கர் நிலப்பரப்பு கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளது. பல கிணறுகளும் மீனவ வாடிகளும் சேதடைந்துள்ளன என்று கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர, இப்பிரதேச மக்களுக்குச் சொந்தமான தென்னந் தோப்புகளும், பயன்தரும் பல்வகை மரம் செடி கொடிகளும் அழிவடைந்து வருகின்றன. இதுவரை சுமார் 200 இற்கும் அதிமான தென்னை மரங்கள் கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் நிகழ்ந்து வரும் கடலரிப்பைத் தடுக்கும் வகையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொண்டு மக்கள் நலனில் அக்கறை கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.







# தமிழ்மொழி மரண விசாரணை அதிகாரிகளுக்குச் செயலமர்வு

(அஸ்ஹர் ஆதம்)

கிழக்கு மாகாண தமிழ் மொழி மரண விசாரணை அதிகாரிகளுக்கான மரண விசாரணை சம்பந்தமான பயிற்சிச் செயலமர்வு ஒன்று அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றது.

நீதியமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி மூல மரண விசாரணை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு பிரதேசத்தில் திருட்டு அதிகரிப்பு: பொலிஸார் பொது மக்களுக்கு எச்சரிக்கை!

(மாமாங்கம் நிருபர் )

மட்டக்களப்பு பிரதேசத்தில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் திருடர்கள் பகலிலும் இரவிலும் நடமாடுகின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது. எனவே பொது மக்கள் தமது உடைமைகளைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும். சந்தேகத்துக்கு இடமாக எவராவது நடமாடினால் உடன் பொலிஸாருக்கு அறிவித்து ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு பொதுமக்களை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கோரியுள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகம் பொது மக்களுக்கு அறிவித்தல் விடுத்து இன்று வியாழக்கிழமை (09) துண்டுப் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில்,

அண்மைக் காலமாக பகலிலும் இரவிலும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே பொது மக்கள் நீங்கள் உங்களுடைய உடைமைகளைக் கவனமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டும்.

எனவே பொது மக்கள் சைக்கிள்,



மோட்டர் சைக்கிள், ஓட்டோ, கார். வான்களை பூட்டி திறப்புக்களை பாதுகாப்பாக வைத்துகொள்ள வேண்டும்.தங்க ஆபரணங்கள், பணம், ஆவணங்கள் போன்றவற்றையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும்.

அதேவேளை தாங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது வீட்டை நன்றாகப் பூட்டித் திறப்பைக் கொண்டு செல்லவும். அதைவிடுத்துத் திறப்பைப் பூச்சாடியின் கீழே, கால்துடைப்பான் கீழே வைப்பதைத் தவிர்ப்பது நல்லது.

சிறுபிள்ளைகளைத் தனிமைப்படுத்தி வீட்டில் விட்டு வெளியே செல்வதை தவிர்க்கவும்.

சிறுவர்களுக்குத் தெரியாதவர்கள் இனிப்பு பண்டம் வழங்கினால் அதை வாங்கி உண்ணவேண்டாம் என்று பிள்ளைகளுக்கு அறிவுறுத்துவதுடன் வீட்டுக்கு அறிமுகம் இல்லாத நபர்கள் வருவதற்கு அனுமதிக்கவேண்டாம் .

அதேவேளை யாசகம் பெறும் மற்றும் பொருட்களை விற்பனை செய்வதாக கூறிவரும் நபர்கள் மீது கவனமாக இருக்கவும். வெளியில் வாகனம் நிறுத்த தேவை ஏற்பட்டால் சிசிரிவி கமரா பொருத்தப்பட்ட இடத்தில் நிறுத்தவும்.

அவ்வாறே வியாபார நிலைய கதவுகளைப் பாதுகாப்பான முறையில் அமைத்துக் கொள்வதுடன் சிசிரிவி கமரா பொருத்தப்படல் அவசியம்.

எனவே பொதுமக்க தமது உடைமைகளில் அதிக கவனம் எடுத்து செயற்பட வேண்டும். சந்தேகத்துக்கு இடமாக நபர்கள் நடமாடினால் உடன் 119 அவசரசேவை அல்லது 0718591130 பொலிஸ் பொறுப்பதிகாரி அல்லது 065 2224422 பொலிஸ் நிலைய இலக்கத்துக்கு அழைத்து பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.- என்றுள்ளது.





# இறக்காமம் பிரதேச செயலகத்தில் மக்களுக்குக் காணி அளிப்புப் பத்திரம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இறக்காமம் பிரதேச செயலர் பிரிவில் மிக நீண்ட காலமாக இருந்துவரும் காணிப் பிரச்சினைகளுக்கு பிரதேச செயலர் அஷ்ஷேய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் வழிகாட்டலில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இறக்காமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பொது மக்களுக்குக் காணி அளிப்புப் பத்திரங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலகக் காணிப் பிரிவின் எற்பாட்டில், காணி உத்தியோகத்தர் என்.எல்.எம். மாஹிர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலர் அஷ்ஷேய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக உதவிப் பிரதேச செயலர் எம்.ஏ.சி. அஹமட் நசீல், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.எம். தௌபிக் மற்றும் நிர்வாகக் கிராம உத்தியோகத்தர் எச்.பி.என். யசரட்ண பண்டார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காணிப்பிரிவின்உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# இஸ்ரேலில் உயிரிழந்த சுஜித்தின் பூதவுடல் நாட்டுக்கு வந்து சேர்ந்தது

ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலில் உயிரிழந்த சுஜித் யடவர பண்டாரவின் பூதவுல் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாகப் பூதலுடன் இன்று அதிகாலை கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிலிருந்து டுபாய் வழியாக, டுபாய் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தின் மூலம் பூதவுடல் கொண்டு வரப்பட்டுள்ளது.

பூதவுடலை பொறுப்பேற்றுக் கொள்வதற்காக உயிரிழந்த சுஜித் யடவர பண்டாரவின் மனைவி, பிள்ளைகள் உள்ளிட்ட குடும்பத்தினர், விமான நிலையத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

அத்துடன், இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் தினேஷ் பிரியந்த, முன்னாள் அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் விமான நிலையத்துக்குச் சமூகமளித்திருந்தனர்.

சுஜித் யடவர பண்டாரவின் இறுதிக் கிரியைகள், வென்னப்புவ பகுதியில் எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறும் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.




# இந்திய றோட்டரிக் கழகத்தின் உறுப்பினர்கள் திருமலைக்கு!

இந்திய றோட்டரி கழக அங்கத்தவர்கள் பின் தங்கிய பகுதியில் வசிக்கும் பாடசாலை மாணவர்களின் மத்தியில் கல்வி தரத்தை மேம்படுத்துவதற்காக "கல்வி சக்தி" என்னும் செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தி வருகின்றனர்.

இதற்காக நேற்று (08) திருகோணமலை றோட்டரிக் கழக அங்கத்தவர்களை சந்தித்தார்கள்.

பெங்களூர் உல்சூர் றோட்டரிக் கழகத் தலைவர் மோகன்குமார், கூ.ஷெட்டி, ரவி, பு. சேகர், ஏ. சோமசுந்தரம், பெங்களூர் உத்யோக் றோட்டரிக் கழக பஞ்சநாதன், கல்வி சக்தி செயற்றிட்ட இணைப்பாளர் நாகராஜன், சென்னை சன் சிற்றி றோட்டரி கழகத்தைச் சேர்ந்த ரி. ஆர். தனசேகரன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

"கல்வி சக்தி" திட்டத்தின் மூலம் பின் தங்கிய கிராமப் பகுதியில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு இணையம் மூலமாக சிறந்த ஆசிரியர்கள் பாடத் திட்டத்தைக் கற்பிப்பார்கள். சகல நிலையத்துக்கும் ஒரு இணைப்பாளர் கடமையாற்றுவார்.

தற்சமயம் இந்தியாவில் 200 நிலையங்களும் இலங்கையில் 3 நிலையங்களும் செயற்படுகின்றன. இதுவரை இந்தச் செயற்பாட்டின் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். இதன் மூலம் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் நிச்சயம் பயன் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிக்குத் திருகோணமலை றோட்டரி கழகம் சார்பில் முன்னாள் தலைவர் வைத்தியர் ஞானகுணாளன் தலைமையில், செயலாளர் ரகுராம் மற்றும் கழக உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

# இலங்கை எழுத்தாளர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் எழுத்துப் பயிற்சிப் பட்டறை!

## ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்

(அ.அஸ்வர்)

நாடளாவிய ரீதியில் புதிய எழுத்தாளர்களின் இலக்கிய ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் முகமாக இலங்கை எழுத்தாளர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மூன்று நாள் எழுத்துப் பயிற்சிப் பட்டறையொன்று நடைபெறவுள்ளது.

சிங்கள மற்றும் தமிழ் இலக்கிய ஆக்கத்தில் ஈடுபடும் புதிய படைப்பாளிகளின் திறமைகளை மெருகேற்றுவதன் மூலம் இலக்கியத்துறையின் வளர்ச்சியின் ஊடாக பண்பட்ட சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் நவம்பர் 28, 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் கொழும்பு பொது நூலக மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் பயிலரங்கில் தொடர்ச்சியாகப் பங்கேற்பவர்களுக்கு பயிலரங்கின் நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப் பட்டறையில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் தமது விண்ணப்பத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் worgtamil@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். இது தொடர்பான மேலதிக விவரங்களை கவிஞர் மேமன்கவி (077861464), இரா.சடகோபன் (0777679232) ஆகியோரைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் மட்டு. மாவட்ட தலைவிக்கு விசாரணை!

## சிங்கள மொழியில் வந்தது கடிதம்!!

சிங்கள மொழியில் எழுதப்பட்ட கடிதம் மூலம், விசாரணைக்கு வருமாறு மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தலைவி அமலதாஸ் நாயகிக்கு நேற்று (08) அவரின் ஆயித்தியமலை இல்லத்துக்குச் சென்ற பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அவரை விசாரணை ஒன்றுக்காக மட்டக்களப்பு உதவிப் பொலிஷ் அத்தியட்சர் அலுவலகத்தில் சமூகம் தருமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 17 ஆம் திகதி ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் இவருக்கு எதிராக வழக்கும் ஒன்று உள்ளது.

கடந்த 08- 10 -2023, அன்று மயிலத்தமடு மேச்சல் தரை மீட்பு கவனஈர்ப்பு போராட்டத்தில் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக கலந்து கொண்ட 35 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில் , மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தலைவி அமலதாஸ் நாயகியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் பொலிஸ் பிரிவில் தென்னந் தோட்டத்தில் சடலம்!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கியுல பகுதியிலுள்ள தென்னந் தோட்டத்தில் தேங்கி நிற்கும் வெள்ள நீருக்குள் இருந்து குடும்பஸ்தர் ஒருவர் நேற்று (08) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மதுரங்குளி , வேலாசிய பகுதியைச் சேர்ந்த ஹேரத் முதியன்சேலாகே பந்துல ஹேரத் எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்ட காலமாக மனைவியை பிரிந்து வாழும் இவர், தென்னை மரங்களில் ஏறி தேங்காய் பறிப்பதை தனது தொழிலாகவும் மேற்கொண்டு வருகின்றார்.

இந்த நிலையில், கியுல பகுதியில் உள்ள தனியார் நபர் ஒருவருக்கு சொந்தமான தென்னந் தோட்டத்தில் வெள்ள நீர் தேங்கியிருக்கும் பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதாக அங்கிருந்தவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.



அந்தத் தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு, விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், அங்கு வருகை தந்த புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் மரண விசாரணையை முன்னெடுத்தார். பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# பாலஸ்தீன ஊடகம் மீதான தடைகளும் படுகொலையான ஊடகவியாளர்களும்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

**(பாலஸ்தீன போராட்டத்தில் ஊடகங்கள் சந்தித்த சவால்களும், அத்துமீறல்களும் எண்ணிலடங்காதவை. தற்போதய இஸ்ரேல்-பாலஸ்தீனம் போரால் இதுவரை 36 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு உறுதிசெய்துள்ளது )**

1948 இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலின் தொடக்கத்தில் இருந்து வெளிநாட்டு போர் நிருபர்கள், தொழில்முறை ஊடகவியலாளர்கள் மற்றும் உள்ளூர் பத்திரிகையாளர்கள் என பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

**பாலஸ்தீன ஊடக சவால்கள்**

பாலஸ்தீன போராட்டத்தில் ஊடகங்கள் சந்தித்த சவால்களும், அத்துமீறல்களும் எண்ணிலடங்காதவை. பாலஸ்தீன பத்திரிகைகளில் ‘அல் அய்யாம்’ பாலஸ்தீனத்தின் இரண்டாவது பெரிய தினசரி செய்தித்தாளாகும்.

‘அல் டிஃபா’ 1934 மற்றும் 1948 இற்கு இடையில் வெளியான ஒரு செய்தித்தாளாகும். பெலாஸ்டின், 1911 முதல் 1967 வரை யாபாவிலும் பின்னர் கிழக்கு ஜெருசலேமையும் தளமாகக் கொண்டு வெளியான ஒரு செய்தித்தாளாகும்.

காசாவில் இருந்து செயல்படும் முதன்மையான வாராந்திர செய்தித்தாள்களில் அல்-ஹயாத், அல்-ஜடிதா, பாலஸ்தீனிய தேசிய அதிகாரசபையின் அதிகார பூர்வ தினசரியாகும். போர்க்காலங்களில் இந்த ஊடகங்கள் மீதான தடைகளும் அத்துமீறல்களும் தொடர்ந்தன.

அல்-ஹுரியா, DFLP உடன் இணைந்த அரசியல் செய்தித்தாள் (பாலஸ்தீன விடுதலைக்கான ஜனநாயக முன்னணி) வெளியாகிறது. அல் ஜாமியா, அல் அரேபியா, 1927 மற்றும் 1935 இற்கு இடையில் வெளியான தினசரி செய்தித்தாள்.

லிசான் அல் அரப், ஜெருசலேமில் உள்ள ஒரு செய்தித்தாள் 1921 மற்றும் 1925 இற்கு இடையில் வெளியிடப்பட்டது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் பாலஸ்தீனம் – இஸ்ரேல் ஜர்னல், ஒரு சுயாதீனமான, இலாப நோக்கற்ற, காலாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படுகிறது. அத்துடன் தி பாலஸ்தீன டெலிகிராப், காசா பகுதியில் உள்ள முதல் இணைய செய்தித்தாள் ஆகும்.

பாலஸ்தீன டைம்ஸ், 2006 முதல் 2007 வரை ஒரே ஆங்கில மொழி தினசரி பாலஸ்தீனிய செய்தித்தாள்




வெளிவருகிறது. திஸ் வீக் இன் பாலஸ்தீனமானது, பாலஸ்தீனத்தின் கலாச்சார, சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை உள்ளடக்கிய ஒரு மாத இதழாகும்.

அல்-குத்ஸ், ஜெருசலேமைத் தளமாகக் கொண்ட தினசரி செய்தித்தாள், அல்-குத்ஸ் ஒரு சுயாதீன பான்-அரபு தினசரி செய்தித்தாள், லண்டனில் வெளியிடப்பட்டது.

**பாலஸ்தீன தொலைக்காட்சி**

பாலஸ்தீனத்தில் உள்ள தொலைக்காட்சியானது வரலாற்று நிகழ்வுகள், பொருளாதார அபிவிருத்தி நோக்கிச் செல்லும் நிகழ்ச்சிகளை காண்பிக்கிறது. ஆனால், ஒரு முக்கிய கருப்பொருள் அரசியல். பாலஸ்தீனிய அதிகாரம் அதன் குடிமக்களுக்காக உருவாக்கப்பட்ட பொது நிகழ்ச்சிகள் மூலம் ஒரு பகுதியாக கலாசார விழுமியங்களை உருவாக்குகிறது. குழந்தைகள் நிகழ்ச்சிகள் முதல் நாடகங்கள்வரை நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகும்.

பாலஸ்தீனிய அதிகாரசபை அரசின் ஒப்புதலுடன் மற்றும் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பாலஸ்தீனிய அதிகாரத்தின் குடிமக்களால் பார்க்கப்படும் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனங்கள் மேல் எப்போதும் ஓர் இராணுவ அச்சுறுத்தல் இருந்த வண்ணமே உள்ளது.

அல்-அக்ஸா டிவி, அல்-குட்ஸ் டிவி, பாலஸ்தீன ரேடியோ மற்றும் டிவி கார்ப்பரேஷன், பாலஸ்தீனிய ஒலிபரப்புக் கழகம், பாலஸ்தீனிய செயற்கைக்கோள் சேனல் மற்றும் சனாபெல் டிவி ஆகியன முக்கியமான பாலஸ்தீன தொலைக்காட்சி நிறுவனங்களாகும்.

பாலஸ்தீனிய ஆட்சி அதிகாரத்தின் அதிகார எல்லைக்குள் உட்பட்ட பாலஸ்தீன தொலைக்காட்சி, 1 ஜுலை 1994 இல் நிறுவப்பட்டது. இஸ்ரேலிய இராணுவ அச்சுறுத்தலுக்கு எப்போதும் முகங்கொடுக்கும் பாலஸ்தீன தொலைக்காட்சி 19 ஜனவரி 2002 அன்று இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி அழித்தனர்.

பாலஸ்தீனிய துப்பாக்கிதாரியால் ஆறு பேரைக் கொன்றதற்குப் பதிலடியாகக் கூறி, ரமல்லாவில் உள்ள பாலஸ்தீனிய ஒலிபரப்புக் கழகத்தின் ஐந்து மாடி பிரதான கட்டடம் மற்றும் ஒலிபரப்புக் கோபுரத்தை இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் அழித்தனர்.

**பத்திரிகையாளர்களுக்கு இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல்**

பாலஸ்தீனத்தில் அல் அய்யம்,அல்-ஹயாத் அல்-ஜடிதா, அல் கர்மில் , அல் மனார், அல் மசார் ஆகிய பத்திரிகைகள் போர்க்காலத்திலும் வெளிவருகிறது. காசாவில் தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் இணையப் பிரச்சினைகள் நிலவி வருகின்றது. தொடர்ந்து காசா நகரில் இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல் பத்திரிகையாளர்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளதுடன் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் அல் குத்ஸ்,பாலஸ்தீன் அல்-முஸ்லிமா,அல்-இத்திஹாத்,குல் அல் அரபு அல்-மதீனா ஆகிய ஊடகங்களின் பத்திரிகையாளர்க்கு இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பாலஸ்தீனத்தின் ஹமாஸ் - இஸ்ரேல் படையினருக்கும் இடையே கடந்த அக்டோபர்

**(12ஆம் பக்கம் பார்க்க)**

# பாலஸ்தீன ஊடகம் மீதான....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

7 ஆம் திகதி ஆரம்பித்த போர் தற்போது தீவிரமாக தொடர்ந்து வருகிறது. இஸ்ரேல் படையினர் காசா பகுதியை கொடூரமாக தாக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் காசாவில் போர் பற்றிய விவரங்களைச் சேகரிக்க பல் வேறு நாட்டில் இருந்து பத்திரிகையாளர்கள் சென்றிருந்தனர். தகவல் சேகரிக்கச் சென்றவர்களில், இதுவரை 36 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர். அதில், 30 பாலஸ்தீனர்கள், 4 பேர் இஸ்ரேலைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒருவர் லெபனானை சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

பல பத்திரிகையாளர்களுக்கு இஸ்ரேல் நேரடி அச்சுறுத்தலை கொடுத்துள்ளதால் போர்க்கள தகவல்களை சேகரிப்பதை பத்திரிக்கையாளர்கள் குறைத்துள்ளனர். அத்துடன் பாலஸ்தீன பத்திரிகையாளர்களை பாதுகாக்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதய இஸ்ரேல்-பாலஸ்தீனம் போரால் இதுவரை 36 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு உறுதி செய்துள்ளது.

இதற்கு முன்பாக 1992 - 2022 வரை இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசத்தில் வேறு 25 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று உழைக்கும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப் பதற்கான குழு ஆவணப்படுத்தியுள் ளது.

மே 2022 வரை, மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் 2008 முதல் மோதலின் விளைவாக 6,036 பாலஸ்தீனியர்கள் மற்றும் 272 இஸ்ரேலிய இறப்புகள் ஏற்பட்டுள்ளன என்று ஆவணப்படுத்தியுள்ளது.

### அமெரிக்க ஊடகர் ஷிரீன் அபு அக்லே கொலை

ஷிரீன் அபு அக்லே ஏப்ரல் 3, 1971 இல் பிறந்த அமெரிக்க ஊடகர். 25 ஆண்டுகளாக அல் ஜஸீராவின் பத்திரிகையாளராகப் பணியாற்றி உள்ளார். இவரின் கொலை சர்வதேச ஊடகப் பரப்பில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக் கரையில் உள்ள ஜெனின் அகதிகள் முகாமில் நீல நிற மேல் அங்கி அணிந்தபடி ஊடகராக பணியாற்றிய வேளையில் இஸ்ரேலிய சிப்பாய் ஒருவரால் கொல்லப்பட்டார்.

பாலஸ்தீனப் பகுதிகளில் பல தசாப்தங்களாக ஊடகப் பணி செய்ததற்காக மத்திய கிழக்கு முழுவதும் அபு அக்லே மிகவும் பிரபல்யமான ஒருவராக இருந்தார். மேலும் பல அரபு மற்றும் பாலஸ்தீனிய பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாகக் காணப்பட்டார்.

11 மே 2022 அன்று அவர் இறந்த வுடன், இஸ்ரேல் கொலைக்கான பொறுப்பை ஏற்க மறுத்தது. மற்றும் பாலஸ்தீனிய போராளிகளை குற்றம் சாட்டியது. இக்கொலை தனது படைகளால் “தற்செயலாக” தாக்கப்பட்டிருக்கலாம் என்பதை முழுமையாக ஒப்புக் கொள்ளும்வரை படிப்படியாக அதன் கதையை மாற்றியது. ஆனாலும் குற்றவியல் விசாரணையை இஸ்ரேல் மேற்கொள்ள மறுத்தது.

### பாலஸ்தீன பெண் ஊடக முன்மாதிரி

சர்வதேச ஊடகங்கள், ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையர் மற்றும் அமெரிக்க வெளியுறவுத் துறை ஆகியவற்றால் நடத்தப்பட்ட பல சுயாதீன விசாரணைகளுக்குப் பிறகு இக் கொலையை விசாரிக்க அனுமதி வந்தது.

இஸ்ரேலிய படைகளால் அபு அக்லே வேண்டுமென்றே குறிவைக்கப்பட்டு மருத்துவ உதவி மறுக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது. ஆயினும் நவம்பர் 2022 இல், அமெரிக்க நீதித் துறை இக்கொலை பற்றிய விசார ணையைத் தொடங்கியது. இந்த நடவ டிக்கையை இஸ்ரேல் கண்டித்ததுடன் ஒத்துழைக்க மறுத்தது.

பத்திரிக்கையாளர் அபு அக்லே கொலைக்கான பொறுப்பேற்றுள்ள இஸ்ரேலிய சிப்பாய் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. அவர் இறந்த விதம் மற்றும் அவரது இறுதிச் சடங்கின் வன்முறை இடையூறு ஆகியவை இஸ்ரேலுக்கு பரவலான சர்வதேச கண்டனத்தை ஏற்படுத்தியது.

### இறுதிச் சடங்கில் பல்லாயிரம் மக்கள்

அவரது இறுதிச் சடங்கில் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் கொடிகளை ஏந்தியபடியும், தேசிய வாதப் பாடல்களைப் பாடியபடியும் கலந்து கொண்டனர். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஜெருசலேமில் நடந்த மிகப்பெரிய பாலஸ்தீனிய இறுதிச் சடங்கு இது என்று நம்பப்படுகிறது.

ஆனாலும் அவரது இறுதிச் சடங்கின் போது இஸ்ரேலிய காவல் துறை அதிகாரிகள் கிழக்கு ஜெருசலேமில் உள்ள செயின்ட் ஜோசப் மருத்துவமனையில் கையெறி குண்டுகளால் தாக்கினர்.

மருத்துவமனையையே தாக்கிய இஸ்ரேலிய பொலிஸார் நோயாளிகளைத் தாக்கினர், தள்ளி மிதித்து கையெறி குண்டுகளை வீசினர். மருத்துவ ஊழியர்களை காயப்படுத்தி, தீக் காயங்களை உருவாக்கினர்.

தற்போதய போர்ச் சூழலில் 26 ஒக்ரோபர் 2023 அன்று, அவர் கொல்லப்பட்ட இடத்தில் எழுப்பப்பட்ட ஒரு நினைவுச் சின்னம் இஸ்ரேலிய இராணுவத்தால் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டது.

### காசாவில் கொலையான ஊடகர்கள்

காசா பகுதிபோரின் போது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளன. ஒக்ரோபர் 7இல் முகமது அல்–சால்ஹி, நான்காவது அதிகாரச் செய்தி நிறுவனத்திற்கான புகைப்படப் பத்திரிக்கையாளர், மத்திய காசாவில் உள்ள பாலஸ்தீனிய அகதிகள் முகாமுக்கு அருகாமையில் சுடப்பட்டார்.

அதே நாளில் முகமது ஜார்கோன், ஸ்மார்ட் மீடியாவுடன் இணைந்த ஒரு பத்திரிகையாளர், ரஃபாவின் கிழக்கே உள்ள ஒரு பகுதியில் மோதல் குறித்து செய்தி வெளியிட்டபோது சுட்டுக் கொல்லப்பட்டார். ஒக்ரோபர் 7 இல் இப்ராஹிம் முகமது லாஃபி, ஐன் மீடியாவின் புகைப்படக் கலைஞர், ஈரெஸ் கடக்கும் இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அசாத் ஷாம்லாக், ஒக்ரோபர் 8இல் ஒரு ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளர், தெற்கு காசாவில் ஷேக் இஜ்லினில் உள்ள அவர்களது வீட்டில் இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது உறுப்பினர்களுடன் கொல்லப்பட்டார்.

ஒக்ரோபர். 10இல் ஹிஷாம் அல்ன் வாஜா, கபார் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளரும் ரிமாலில் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார். அதே நாளில் முகமது சோப், கபார் நியூஸ் ஏஜென்சியின் புகைப்படக் கலைஞரும் ரிமாலில் வான்வழித் தாக்குதலில் கொல்லப் பட்டார்.

கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் இன்னும் நீளமானது. இதுவரை 36 ஊடகர்கள் இஸ்ரேலிய படைகளால் கொல்லப்பட்டுள்ளனர்.



# உதைபந்தாட்ட வீரருக்கு காலணி வழங்கிவைப்பு!

(எம். எப். நவாஸ் )

பாலமுனை றை ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட வீரர்களை ஊக்கப்படுத்தும் முகமாக கழகத் தலைவர் எஸ். எல். எம். ஆஷிக் தலைமையில் காலணி வழங்கி வைக்கும் நிகழ்வு ஐ. எல். எம்.பாயிஸ் ஆசிரியரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அரசியல் செயற்பாட்டாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் பலநோக்கு கூட்டுறவு சங்கப் பணிப்பாளர் சபை உறுப்பினருமான றிசாட் ஏ. காதர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் கழகத்தின் முன்னாள் தலைவருமான எம். ஏ . அன்சில், எம். ஐ.றிப்னாஸ், ஜே. எம்.அஸ்கான், பைஸல் ஆகியோரும் கலந்து கொண்டு கழக வீரர்களுக்கு காற்பந்து உபகரணங்களை வழங்கினர்.







வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்




AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882





# பாலமுனையில் மாணவர் சந்தை

(நவாஸ் )

பாலமுனை அல்-ஹிதாயா மகளிர் கல்லூரியில் 2023 ஆம் ஆண்டுக்கான மாணவர் சந்தை பாடசாலையின் முதல்வர் பி. முஹாஜிரீன் வழிகாட்டலின் கீழ் (9) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஈ.பி.எஸ்.ஐ. இணைப்பாளர் ஏ. எல்.பாயிஸ் கலந்து கொண்டார்.

பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நலன்விரும்பிகள், எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இவர்கள் மாணவர்களின் சந்தையைப் பார்வையிட்டதோடு பொருள்களையும் கொள்வனவு செய்தனர்.





# கல்முனை நூலகத்தில் வாசிப்பு மாத நிகழ்வுகள்

(அஸ்ஹர் ஆதம், ஏ.எஸ். மௌலானா)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் விசேட செயற்றிட்டம் கல்முனை பொது நூலகத்தில் இன்று வியாழக்கிழமை (09) இடம்பெற்றது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி பிரதம அதிதியாகவும் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் கௌரவ அதிதியாகவும் பங்கேற்றனர். ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.சிவப்பிரகாசம் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை, ஆர்.கே.எம். வித்தியாலயம், இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல அக்ஸா மகா வித்தியாலயம் ஆகிய 04 பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கலந்து கொண்டனர்.





# கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் நானாட்டான் பிரதேசத்தில் போதியதாக இல்லை!

## மாற்று வழி தேவை என்கிறார் பிரதேச செயலர் ஸ்ரீஸ்கந்தகுமார்

(மன்னார் நிருபர்)

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் தற்போது போதாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே - மாற்று வழியை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்று நானாட்டான் பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மன்னார, நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலத்தை அடையாளப்படுத்துவது தொடர்பான பிரச்சினை நீண்ட காலமாக இழுபறி நிலையில் உள்ளது. இந்த நிலையில் இது விடயம் தொடர்பில் பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

நானாட்டான்பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட கால்நடைகளை மேய்ச்சலுக்காக மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பகுதிகளுக்கு கொண்டு செல்வது சம்பந்தமான கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் மற்றும் பிரதிநிதிகளும் கால்நடை வளர்ப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

கால் நடைகளை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெருவெளி பகுதிக்கு கொண்டு செல்வது தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதற்கு அமைவாக நானாட்டான் பிரதேச செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், இலுப்பக்கடவை கமக்கார அமைப்பின் தலைவர் போன்றவர்களுடன் கலந்துரையாடப்பட்டு இந்த விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. பின்னர் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நானாட்டான் பிரதேசத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை தெரிவு செய்வது தொடர்பாக மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட



தீர்மானங்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கட்டுக்கரை குளத்தினுள் அடையாளம் காணப்பட்ட புல்லறுத்தான் கண்டல் என்று அழைக்கப்படுகின்ற 350 ஏக்கர் விஸ்தீரணம் உடைய நிலப் பகுதி ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைபடத்தின் உள்ளே முருங்கன் ரயில் நிலையமும் அதனுடைய தண்டவாள பகுதிகளும் புகையிரத விடுதிகளும் விதைப் பண்ணையும் ஏனைய பிரதேசங்களும் அடங்குகிறது.

அத்தோடு கட்டுக்கரை குளத்தின் நீரைக் கொண்டு வரும் உள்வரத்து வாய்க்காலும் காணப்படுகின்றது.

இவற்றைத் தவிர அங்கு மேய்ச்சல் தரவைக்குப் பொருத்தமான பிரதேசமாக 150 தொடக்கம் 200 வரையான ஏக்கர் நிலப்பரப்பு அடையாளம் பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பானது நானாட்டான் பிரதேசத்தில் காணப்படும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால் நடைகளுக்கும் 2500 எருமை மாடுகளுக்கும் போதுமானதாக அமையாது.

அத்தோடு வருங்காலத்திலே கட்டுக்கரை குளத்தின் கட்டு அமைப்பானது இரண்டு அடிக்கு உயர்த்தப்படும் போது அதனுடைய நீர் பிடிப்பினுடைய அளவு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

எனவே கட்டுக்கரைக்குள் தற்பொழுது கிடைக்கக் கூடியதாக இருக்கும் 150 தொடக்கம் 200 வரையான ஏக்கர் நிலப்பரப்பு மேலும் குறைந்து போவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளது.

நீர்ப்பாசனப் பணிப்பாளரின் கருத்துப்படி கட்டுக்கரைக் குளத்தின் உச்ச நீர்மட்ட எல்லையில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால் கால் நடைகளை வைத்துக் கொள்வது தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்ற கருத்துக்கு அமைவாக இந்த கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் இங்குள்ள கால்நடைகளுக்கான வேறு மேய்ச்சல் தரைகளை எங்களால் கண்டுபிடிக்க முடியாத நிலை காணப்படுகிறது. ஏனென்றால் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவு மன்னார் மாவட்டத்தினுடைய மொத்த நிலப்பரப்பில் ஆறு சதவீதமாக மட்டுமே இருக்கிறது.

எனவே இந்த ஆறு சதவீதமான நிலப்பரப்பில் வங்காலை பறவைகள் சரணாலயம், கட்டுக்கரை குளத்தில் உள்ளே இருக்கும் பறவைகள் சரணாலயம், கண்டல் உற்பத்தி காடுகள் உள்ளன.

ஆகவே அரச காணி என்று எந்த ஒரு காணிகளும் எங்களால் அடையாளம் காண முடியவில்லை. இவ்வாறு அடையாளம் கண்டாலும் அவை 10 பேர்ச்சுக்கு உள்ளாக பொது மக்களின் வாழ்விடங்களுக்கு உள்ளேயே இருக்கிறது. அதனால் எங்களுடைய கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை பெற்றுக் கொள்வதற்காக வேறு மாற்று வழிகளை நாட வேண்டிய சூழல் எழுந்துள்ளது.

எங்களுக்கு கிடைக்கப்பெற்று இருக்கின்ற மேய்ச்சல் தரைகளுக்கு மேலதிகமாக மேய்ச்சல் தரவை களை தேடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மேய்ச்சல் தரவைக்குப் பொறுப்பான திணைக்களம் விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகும். கால்நடைகள் தொடர்பான விடயங்களுக்கு அந்தத் திணைக்களம் பொறுப்பு கூற வேண்டும்.

அந்த வகையில் விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்கத்தினரோடு சேர்ந்து அனைவரும் இதற்கான மாற்று வழிகளை அமைக்க வேண்டும்.– என்றார்.

# முஸ்லிம் கட்சிகள் அரசியல் தீர்வு விடயத்தில் பொதுவான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்!

## முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(கே. எ. ஹமீட் )

முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் முஸ்லிம் சமுகத்தின் நிலைப்பாட்டை முன் வைக்க வேண்டும்.



இவ்வாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி முன்னாள் அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமா லெப்பை தெரிவித்தார்.

இறக்காம முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எஸ்.எல்.நிஸார் தலைமையில் இறக்காமத்தில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில் தெரிவித்தவை வருமாறு–

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாட்டை முன்வைப்பதற்காக முதலில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்பட்டு அவர்கள் நியாயமான தீர்மானம் ஒன்றை மேற் கொள்ள வேண்டும்.

இதற்கான முயற்சிகளை முஸ்லிம்க ளின் தாய் கட்சியான முஸ்லிம் காங் கிரஸ் தலைவர் றவூப் ஹக்கிம் மேற் கொண்டு வருகிறார்.

அடுத்த கட்டமாக உலமா சபையினர் முஸ்லிம் புத்திஜீவிகள், பள்ளிவாசல் தலைவர்கள், சிவில் சமுகத்தினரிடம் கலந்துரையாடி எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தீர்மா னத்தை மேற்கொள்ள வேண்டும். முஸ் லிம் சமுகத்தின் அரசியல் தீர்வு யோச னையை முன்வைக்க வேண்டும். இதன் அடுத்த கட்டமாக அரசுடனும், தமிழ் கட்சிகளுடன் முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடு தொடர்பாகப் பேச்சில் ஈடுபட வேண்டும். இதனையே முஸ்லிம் சமூகம் எதிர்பாத்துள்ளது.

தலைவர் அஸ்ரப் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கிய போது அம்பாறை மாவட்டத்தில் சிறிய கிராமங்களை சேர்ந்த மக்கள் தலைவர் அஸ்ரப்புக்கு பெரும்பான்மை ஆதரவு வழங்கினர்.

பெரிய ஊர்களில் அரசியல் அதிகா ரங்கள் இருந்தால் படிப்படியாகவே முஸ்லிம் காங்கிரஸையும் தலைவர் அஸ்ரப்பையும் ஏற்றுக்கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் அனைத்து முஸ்லிம் கிராமங்களிலும் முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கட்சியின் நலன் கருதி உள்ளூர் கட்சிப் பிரமுகர்கள் அர்பணிப்பு டன் செயற்பட வேண்டும் .– என்றார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர், பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், அம்பாறை மாவட்டக் குழுவின் செயலாளர் ஏ.சி.சமால்தீன், அரசியல் அதி உயர் பீட உறுப்பினர் ஏ.பீ.றியால், இறக்காம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான எம்.எச். முஸ்னி ஆகியோர் கலந்து கொண்டனர்.






# பசறிச்சேனை பிரதேசத்துக்கு பாகிஸ்தான் தூதுவர் விஜயம்

(கே. எ. ஹமீட் )

பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக் கான தூதுவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜென ரல் உமர் பாறூக் புர்கி பசறிச்சேனை பிரதேசத்துக்குச் சென்று பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முசாரப் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் பாகிஸ்தான் தூ தரகத்தின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளஒபாடங்கள் பசறிச் சேனை அல்–இஷ்ராக் மஹா வித்தியா லயத்துக்கு வழங்கப்பட்டன.

அத்துடன் 10 கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்குக் கடின பந்து, உபகர ணங்கள் மற்றும் 100 குடும்பங்களுக் கான உலர் உணவுப் பொதிகள் என்பன இதன் போது வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்த ரணி எஸ்.எம்.எம்.முசாரப்பின் வேண்டு கோளின் பேரில் பாகிஸ்தான் தூதரகத் தின் நிதி உதவியில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

# உலகின் புதிய உச்சங்களை இந்தியா தொட்டிருக்கிறது!

## - பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்

உலக அரங்கில் இந்தியா புதிய உச்சங்களை தொட்டிருக்கின்றது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்தியப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, சாட்னா நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரை யாற்றினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக அரங்கில் புதிய உச்சங்களை இந்தியா தொட்டிருக்கிறது. மகான்கள் மற்றும் மக்களின் ஆசிர்வாதமே இதற்குக் காரணம். மக்கள் தங்கள் வாக்குகளைக் கொண்டு இந்த அதிசயத்தை நிகழ்த்தி இருக்கிறார்கள். வாக்குக்கு இருக்கும் இந்த சக்திதான், நாட்டின் எதிரிகளின் துணிச்சலை முறியடித்திருக்கிறது.

இம்முறையும் நீங்கள் பா.ஜ.கவுக்கு வாக்களிக்க வேண்டும். மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சியை அமைப்பதன் மூலம், மத்தியில் எனது கரம் வலுப்படும். உங்கள் ஓட்டு, காங்கிரஸை வெளியே தள்ளுவதாக இருக்க வேண்டும்.

மத்தியப் பிரதேசத்தை எப்படி முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனை காங்கிரஸ் கட்சிக்குக் கிடையாது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், இளைஞர்களுக்கு எதிர்காலம் இருக்காது. எனது வாக்குறுதி மீது மத்தியப் பிரதேசம் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

தற்போது நான் எங்கே சென்றாலும் அயோத்தி ராமர் கோயில் குறித்தே மக்கள் அதிகம் பேசுகிறார்கள். மகிழ்ச்சி அலை எல்லா இடங்களிலும் பரவி இருக்கிறது.

வீடு இல்லாத மக்களுக்கு நல்ல வீட்டினை கட்டித் தருவதில் முந்தைய காங்கிரஸ் அரசு தோல்வி அடைந்தது. எனது வாக்குறுதியின்படி, வீடு இல்லாதவர்களுக்கு நல்ல வீடு கட்டித்தரப்படும் என்று தெரிவித்துள்ளார்.



# முதல்முறையாக அயோத்தியில் கூடியது உத்தரப்பிரதேச அமைச்சரவை!

## - முக்கிய முடிவுகளை அறிவிக்கிறார் முதல்வர் யோகி

உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத் தலைமையில் அம்மாநில அமைச்சரவைக் கூட்டம் முதல்முறையாக இன்று அயோத்தியில் கூடியது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததன் 4 ஆம் ஆண்டைக் கொண்டாடும் விதமாக உத்தரப்பிரதேச அமைச்சரவைக் கூட்டம் அயோத்தியில் இன்று கூடி உள்ளது. முதலமைச்சர் யோகி ஆதித்யாநாத் தலைமையில் இன்று காலை சுமார் 11.30 மணி அளவில் இந்த கூட்டம் தொடங்கியது.

இதற்காக, அனைத்து அமைச்சர்களும் அயோத்திக்குச் சென்றுள்ளனர். 5 மாநில தேர்தல் பணியில் இருந்த அமைச்சர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க உத்தரவு பிறக்கப்பட்டதை அடுத்து அவர்களும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

அமைச்சரவைக் கூட்டம் முதல்முறையாக அயோத்தியில் கூடுவது குறித்து முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய துணை முதல்வர் பிரஜேஷ் பதக், இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நாங்கள் முக்கிய முடிவுகளை எடுக்க இருக்கிறோம். தீபாவளிக் கொண்டாட்டம் நெருங்கி வருகிறது. நாங்கள் மிகப் பெரிய சாதனை படைக்க உள்ளோம். அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேகம் ஜனவரி 22 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இதற்கான பிராண பிரதிஷ்டை நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொள்ள இருக்கிறார் என்று தெரிவித்தார். உத்தரப்பிரதேச அமைச்சரவை அமைச்சர் நந்தகோபால் நந்தி கூறு கையில்,

இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணம். இதனை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. இது ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நாள். வரும் காலங்களில் இந்த நாள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

முன்னதாக, முதல்வர் யோகி ஆதித்யாநாத், தனது அமைச்சரவையுடன் சென்று அயோத்தியில் உள்ள அனுமர் கோயிலில் வழிபாடு செய்தார். இதனையடுத்து, அயோத்தி ராமர் கோயிலுக்குச் சென்று அங்கும் அவர்கள் வழிபாடு நடத்தினர்.

# பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக ஏன் அடையாளப்படுத்துகிறீர்கள்!

## - மோடியை சாடினார் ராகுல் காந்தி

பிரதமர் நரேந்திர மோடி தன்னை ஏன் ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக அடையாளப்படுத்திக் கொள்கிறார் என்று முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

சத்தீஸ்கரில் மொத்தம் 90 சட்டப் பேரவைத் தொகுதிகள் உள்ளன. அந்த மாநிலத்தில் முதல்கட்டமாக 20 தொகுதிகளுக்கு 7 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற்றது. மீதமுள்ள 70 தொகுதிகளுக்கு நவம்பர் 17 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும். டிசம்பர் 3 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

இந்த நிலையில், சத்தீஸ்கரின் அம்பிகாபூரில் நடந்த தேர்தல் பேரணியில் ராகுல் காந்தி கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதமர் மோடி ஒவ்வொரு மேடையிலும் பேசும்போது நான் ஒரு 'பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்' என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார். ஆனால் நான் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பைப் பற்றிப் பேசும்போது,

இந்தியாவில் சாதியே கிடையாது. அதைத் தாண்டி சாதி இருக்கிறதென்றால், அது ஏழை என்ற ஒரேயொரு சாதிதான் என்று சொல்கிறார். பிறகு ஏன் பிரதமர் மோடி தன்னை ஒரு பிற்படுத் தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக அடையாளப் படுத்திக் கொள்கிறார்? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# சிரியா மீது அமெரிக்கா மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 9 பேர் உயிரிழப்பு



சிரியாவில் உள்ள ஈரான் ஆதரவுடன் செயல்பட்டு வரும் அமைப்புக்களின் ஆயுதக் கிடங்கு மீது அமெரிக்கா வான்தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் லாய்டு ஆஸ்டின் தெரிவித்துள்ளார்.

இரண்டு அமெரிக்க எஃப் -15 போர் விமானங்கள் சிரியாவில் குண்டுமழை பொழிந்ததாகவும், தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப் படுகின்றது.

மத்திய கிழக்கு பகுதிகளில் உள்ள பெரும்பாலான நாடுகளில் ஈரான் ஆதரவு பெற்ற ஆயுதம் ஏந்திய அமைப்புக்கள் செயல்பட்டு வருகின்றன.

அமெரிக்க வீரர்கள் தங்கியிருக்கும் வீடுகள் மற்றும் இராணுவ நிலைகள் மீது ஈரான் ஆதரவு அமைப்பினர் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

தாக்குதலுக்கு அமெரிக்காவும் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

இந்த நிலையில் அமெரிக்கா நடத்திய வான்தாக்குதல் 9 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# பணயக் கைதிகள் வீடு திரும்புவதற்கு இந்தியர்கள் விளக்கேற்றி வழிபடுங்கள்

## - இஸ்ரேல் தூதர் வேண்டுகோள்



ஹமாஸ் அமைப்பிடம் சிக்கியுள்ள இஸ்ரேல் பணயக் கைதிகள் வீடு திரும்ப வேண்டும் என்ற நம்பிக்கையில் இந்த தீபாவளிக்கு இந்தியர்கள் விளக்கேற்றி வழிபட வேண்டும் என இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப் பினர் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி தாக்குதல் நடத்தினர்.

இதில் இஸ்ரே லியர்கள் 1,100 பேர் உயிரிழந்தனர். மேலும் இஸ்ரேலியர்கள் 240 பேரை ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

அவர்களை தேடும் பணியில் இஸ்ரேல் இராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. காசா மீதான தாக்குதலை நிறுத்தினால், பணயக் கைதிகளை விடுவிப்பதாக ஹமாஸ் கூறியுள்ளது. ஆனால், காசா நகரில் தரை வழி தாக்குதல் நடத்தி அந்த நகரை இஸ்ரேல் இராணுவம் சுற்றிவளைத்துள்ளது.

இந்த நிலையில், இந்தியாவுக கான இஸ்ரேல் தூதர் நார் கிலான் தனது சமூக வலைத்தள பக்கத்தில் விடுத்துள்ள காணொலி செய்தியில், பகவான் ராமர் ராவண வதத்துக்குப் பின்னர் நாடு திரும்பியதை ஒவ்வொரு தீபாவளியன்றும் மக்கள் விளக்கேற்றி கொண்டாடுகின்றனர்.

அதுபோல இந்த தீபாவளிக்கு, இஸ்ரேல் பிணைக் கைதிகளும் நாடு திரும்ப வேண்டும் என்ற நம்பிக்கையில் இந்தியர்கள் விளக்கேற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தெற்கு காசாவை நோக்கி படையெடுக்கும் மக்கள்!

காசாவின் வடக்கு பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்தும் இருவழி தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் அங்குள்ள மக்கள் தெற்கு காசாவை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 15 ஆயிரம் பேர் வடக்கு காசாவை விட்டு வெளியேறியுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர் தொடங்கிய ஒரு வாரத்தில் இஸ்ரேல் இராணுவம் விடுத்த எச்ச ரிகையை அடுத்து முன்னதாக பல்லா யிரக்கணக்கான மக்கள் தெற்கு காசா வுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்கலில் பலர் சோதனை சாவடிகளை கடக்கும் போது இஸ்ரேலிய படைகளால் கைது செய்யப்படுகின்றனர் என கூறப்படுகிறது.

இதற்கிடையில் இஸ்ரேல் இராணுவம் காசாவின் வடக்குப் பகுதியை மட்டுமல்லாமல் கான் யூனிஸ் நகரம் உட்பட தெற்குப் பகுதியையும் தொடர்ந்து தாக்கிவருகிறமை குறிப்பிடத்தக்கது.